திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இவ்வளவு அதிகமான வரி பாக்கி இருப்பதற்குக் காரணம் என்ன? நகரசபை விதித்துள்ள அதிகமான வரிவிதிப்பை எதிர்த்து மக்கள் வரி கொடுக்காமல் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுவது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, வரி விதிப்பு அதிகமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதனால் நகர மன்றத் தலைவர், 1970–71-ம் ஆண்டின் முதல் அரையாண்டுக்கும் 31—3—1970 வரை அளித்துள்ள வரி தள்ளுபடி வழங்க வேண்டும் என்றும், இப்போதிருக்கும் ஆண்டொன்றுக்கு 25 சதவீத வரியிலிருந்து 20 சதவீதமாகக் குறைக்க வேண்டுமென்றும், புதிய கட்டிடங்களுக்கான 25 சதவீதம் வரிவிதிப்புத் தள்ளுபடியை அனுமதித்த 50 சதவீதமாக மாவட்ட ஆட்சியாளர் அதிகரித்துக் கொடுக்கவும், காலிமனை வரியை 50 சதவீதத் தள்ளுபடியிலிருந்து 62½ சதவீதமாகத் தள்ளுபடி செய்யவும், விவசாய நிலங்களுக்கான வரியை ரத்து செய்யவும் அனுமதி கேட்டார். அவருடைய கோரிக்கையை அரசு பரிசீலித்து, 29—1—1972-ல் ஆண்டொன்றுக்கு 25 சதவீதம் வரி விதிப்பை ஆண்டொன்றுக்கு 20 சதவீதமாகக் குறைக்க அனுமதிக்கப்பட்டது. பக்கத்திலுள்ள கோவை நகரில் குறைவாக இருக்கிறது என்று சொல்லப்பட்டதன் காரணமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. 1—4—1972 முதல் அது அமல் செய்யப்படும்.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, அரசாங்கத்தின் 25 சதவீதமாக இருந்த வரியைக் குறைத்ததன் அடிப்படையில் எவ்வளவு ரூபாய் வரி குறையும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பக்கத்தில் இருக்கின்ற கோவையில் 20 சதவீதம் என்றிருப்பதால் சிங்காநல்லூரிலும் அந்த அளவுக்கு இருந்தால் போதும் என்று குறைக்கப்பட்டிருக்கிறது. வேறு பல புதுச் சலுகைகள் கேட்டார்கள். அந்தச் சலுகைகள் அனுமதிக்கப்படவில்லை. எவ்வளவு ரூபாய் குறையும் என்பதற்கு விவரம் இல்லை.

சென்னை மாநகராட்சியில் சாலைகள் பராமரிப்பு

*770 வினா— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

1971–72-ஆம் நிதி ஆண்டில் சென்னை மாநகராட்சிப் பகுதியில் சாலைகளைச் செப்பனிட அரசு வழங்கியுள்ள கடன், மானியத் தொகைகள் எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சாலைகள் பராமரிப்பு சம்பந்தமாக நடப்பு ஆண்டில் (1971–72-ல்)முறையே ரூ. 20·00 லட்சம் கடனாகவும், ரூ. 30·00 மானியமாகவும் அரசு, சென்னை மாநகராட்சிக்கு வழங்கியுள்ளது.

யாத்ரீகர்கள் வரி விதிப்பு.

* 771 வின :—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விணுவுக்கு விடையளிப்பாரா :—

ரயில்வேக்கள் வாங்கும் "பில்கிரிம்" வரி (Pilgrim Tax)-லிருந்து தமிழ்நாடு அரசுக்கு அல்லது குறிப்பிட்ட பகுதிகளுக்கு எத்தனை சதவீதம் திருப்பித் தரப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : யாத்திரீகர்கள் வரி விதிப்புத் தொகையிலிருந்து அரசாங்கக் கணக்கிற்குப் பிரித்துக் கொடுக்கப்படுவதில்லை. வசூல் செலவுக்காக 3 சதவீதம் (தனிச் சீட்டாக இருந்தால் 5 சதவீதம்) கழித்தது போக வசூல் தொகை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களுக்கு இருப்புப்பாதை அதிகாரிக் குழுவினரால் கொடுக்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த ரயில்வேத் துறையினரால் வசூலிக்கப்படும் பில்கிரிம் வரியை குறிப்பிட்ட அந்த உள்ளாட்சிக்கோ அல்லது தமிழ்நாடு அரசாங்கத்திற்கோ முழுவதுமாகச் செலுத்த வேண்டுமென்று கோரி நமது அரசு மத்திய அரசை வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எந்தெந்த நகராட்சிகளில் அல்லது ஊராட்சிகளில் யாத்திரீகர்கள் வரி விதிக்க அனுமதிக்கிறோமோ, அந்தப்பொறுப்பை அந்தப் இடத்திலுள்ள ரயில்வே நிர்வாகத்தினர் ஏற்றுக்கொள்கிறார்கள். வசூலிப்பதில் 3 சதவிகிதம் (தனி சீட்டாக இருந்தால் 5 சதவிகிதம்) அவர்கள் செலவுக்காக எடுத்துக் கொண்டு மீதித் தொகையை சம்பந்தப்பட்ட நகராட்சிகளுக்கோ, அல்லது ஊராட்சிகளுக்கோ கொடுத்துவிடுகின்றனர். இந்த முறைதான் எங்கும் இருக்கிறது. முழுத் தொகையையும் கொடுப்பது கிடையாது.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, இந்த யாத்திரீகர்கள் வரி எந்த அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பெரிய திருவிழாக்கள் நடைபெறுவதன் காரணமாகவோ, அல்லது வேறு காரணங்களாலோ அதிகமாக மக்கள் அடிக்கடி பார்வையிட வருகின்ற இடங்களில் இந்த யாத்திரீகர்கள் வரி வசூலிக்கப்படுகிறது. அதிகமாக மக்கள் வருவதால், அவர்களுக்கு வசதி செய்து கொடுப்பதில் அதிகமாகச் செலவு ஏற்படுகிறது. அந்தச் செலவை ஈடுகட்டும் வகையில் சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் அல்லது நகராட்சிகள் இந்த யாத்திரீகர்கள் வரியை வசூலிக்கின்றார்கள்.

திரு. எஸ். முருகையன் : தலைவரவர்களே, இந்த யாத்திரீகர்கள் வரி ரயில்வே நிர்வாகத்தினர் மூலமாக வசூலிக்கப்படுவதால், ரயிலில் வருகின்றவர்களிடம் தான் வசூல் செய்ய முடியும். திருவிழாக்கள் நடைபெறுகின்றபோது பெருந்திரளான மக்கள் கூட்டம் வருவதால் அவர்